# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 10 செப் – அக்டோபர் 2024



SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

1 இலட்சம் சீட்டு
முதல்
1 கோடி சீட்டு
வரை....




ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்




எங்களின் வெற்றிப்பயணத்தில்
மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474


நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்




GET IT ON Google Play

## வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்


**செப் – அக்டோபர் 2024**

மலர் : 3  இதழ் : 10

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534


---


கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றி !

பொதுவாக நமது செட்டிநாட்டில் ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் ஒவ்வொரு விழாக்கள் நிகழும். அதில் வரும் புரட்டாசி மாதம் சற்று விசேஷம் நிறைந்த மாதம்.

பொதுவாக புரட்டாசி மாதத்தின் போது தான் வெயிலும், காற்றும் குறைந்து மழை ஆரம்பிக்கும் காலமாக உள்ளது. இதனால் இதுவரை பூமி வெயிலால் சூடாகி இருக்கும். மழை பொழியும் போது, அதை ஈர்த்து புவியின் வெப்பத்தை குறைக்கும் பொருட்டு, தன்னுள் இருக்கும் சூட்டை வெளியில் விட ஆரம்பிக்கும். இதனால் புரட்டாசி மாதம் சூட்டை கிளப்பி விடும். இது வெயில் காலத்தில் சூடான காலநிலையைக் காட்டிலும் மிக மோசமான விளைவுகளை தரக் கூடியது.இந்த காலத்தில் அசைவம் சாப்பிடுவதால், உடல் சூட்டை மேலும் அதிகரிக்கச் செய்து, நம் உடல் நலனை மேலும் பாதிக்கச் செய்யும்.

இந்த மாதத்தில் செட்டிநாட்டுப் பகுதி மக்கள் பெரும்பாலும் அனைவரும் சைவ உணவே எடுத்துக் கொள்வர். புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் காலையில் நீராடி விரதம் இருந்து பெருமாளை வணங்கி அன்றே செய்த உணவை வாழை இலையில் உண்பார்கள். இந்த காலத்தில் ஏற்படும் உடல் நல பிரச்னையை, பெருமாள் கோயிலில் கொடுக்கப்படும் துளசி தீர்த்தம் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கது. இதனால் தான் புரட்டாசி மாதத்தில் விரதம் இருந்து பெருமாள் கோயிலுக்கு செல்ல வேண்டும் என முன்னோர்கள் ஒரு பழக்கத்தை வைத்துள்ளனர்.

இந்த மாதத்தில் நம் செட்டிநாட்டுப் பகுதியெங்கும் ஏடு படித்தல் (இராமாயணம் படித்தல்) நிகழும். இந்த நிகழ்வு அனைத்து சமூகத்தவர்களாலும் நிகழ்த்தப்படும்.

இராமாயணம் படிப்பதில் ஒரு சூட்சமம் வைத்திருந்தனர் நம் முன்னோர்கள். இராம காவியம் நமக்கு சகோதர ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது. நம் செட்டிநாட்டில் முன்பு வீட்டில் ஐந்து அல்லது ஆறு

பிள்ளைகள் இருக்கும். அவர்கள் ராமன், லெட்சுமணன், பரதன், சத்ருகன் ஆகிய நால்வர் போன்று ஒற்றுமையாய் வாழ வேண்டும் அறவழியில் நடக்கவேண்டும் என்பதையும் குடும்ப ஒற்றுமை பலப்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டு இந்த நிகழ்வை தொடங்கிவைத்தனர்.

மேலும் ஊர் பொதுவாக இராமாயணம் படிப்பது நிகழ்வதன் நோக்கம், அனைத்து மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். தவறான வழியில் சென்றால் ஏற்படும் விளைவுகளை இராமாயண கதையின் மூலம் உணர்ந்து நல்வழியில் செல்லவேண்டும் என்ற நோக்கில் நிகழ்த்தப்படுகிறது.

நம் ஐயாக்களும், ஆயாக்களும், அப்பத்தாக்களும் நமக்கும் சொல்லி சென்றதை நாமும் நம் பிள்ளைகளுக்கு சொல்லி புரிய வைக்க வேண்டும். இது நம் பண்பாடு. நம் பண்பாடை நாம் தான் பாதுகாக்க வேண்டும்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக மின்னிதழின் MOBILE APP தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது. இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும் !



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

# PALLATHUR MOTORS LLP

SWITCH TO THE FUTURE

## PETROL RIDER LIFE

SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !




## ELECTRIC RIDER LIFE

SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!



# ELECTRIFY YOUR JOURNEY NOW

Go far and wide with just
a single charge

LECTRIX



Book Your TEST DR!VE Now!!

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- உடல்நலத்தைப் பேண பெண்களுக்கு விருப்பமில்லையா? அல்லது நேரமில்லையா? – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. ................10

**பண்பாடு**

- ஏடு படிப்போம் வாங்க..!! – ஆ.தெக்கூர் கண.இராம.நா.இராமநாதன் ..........24

**கவிச்சோலை**

- ஆசிரியர் – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் ........................29
- வேலை படுத்தும் பாடு –கவிஞர் எம்.சோலை காரைக்குடி...................58

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் ....................31

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA ........... 39

**பக்தித் தொடர்**

- ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் – புலவர் த.கோவேந்தன், டி. லிட் ...... 40

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ............42

**சமையல்**

- சைவ மட்டன் பிரியாணி செய்வது எப்படி.....................................45

**பங்குசந்தை**

- ஐ பி ஓ செய்திகள் –கார்த்திக் முத்தப்பன் நகரத்தார் கேப்பிட்டல் ............48

**ஆன்மிகம்**

- புண்ணியம் தரும் புரட்டாசி சனி விரதம் ..............................59

**உணவே மருந்து**

- ஆரோக்கியமாக இருக்க 15 வழிகள் ...................................62

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ........... 67

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி... துலாம் லக்னம்..! – ஜோதிடர் எல்லி .....................80

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

# உடல்நலத்தைப் பேண பெண்களுக்கு விருப்பமில்லையா? அல்லது நேரமில்லையா?



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

இன்றைக்கு பெண்கள் ஓடி ஆடி வீட்டிலும், வெளியிலும் வேலை பார்க்கிறார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் அலுவலகம் சென்று உழைப்பது என்பது குறைவு. ஆனால் இன்றைக்கு அலுவலகம் சென்று உழைக்காத பெண்களே இல்லையென்றே சொல்லலாம். ஒவ்வொரு பெண்களும் தங்களின் குடும்பத்திற்காகவும், பொருளாதார வசதிக்காகவும் உழைத்துப் பொருள் சேர்த்து வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள்.



அப்படி நினைத்துச் செயல்படும் பெண்கள், அலுவலகத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி அவற்றையும் தாங்கிக் கொண்டுதான் தினமும் உழைக்கிறார்கள். அதைவிட தனது குடும்பத்தினரின் நலத்திற்காகவும் வீடுகளில் பம்பரமாகச்சுழன்று வேலை பார்க்கிறார்கள்.

வீட்டில் அவர்கள் அலுவலக நேரம் போக மீதியுள்ள நேரத்தில் பெரும்பாலும் தங்களின் பொழுதைச் சமையல் அறையிலேயே செலவழிக்கிறார்கள்.

கணவனுக்கு எது பிடிக்கும்? குழந்தைகளுக்கு எது பிடிக்கும்? வீட்டிலுள்ள தாய் தந்தையர்க்கு எது பிடிக்கும்? நாளை அலுவலகத்திற்கு கொண்டு போக எதைச் சமைத்து வைக்கலாம்? என்ற சிந்தனையிலேயே மூழ்கிக்கிடக்கிறாள் பெண்.

தனக்குப்பிடித்த உணவையோ அல்லது தனது உடல்நலத்திற்கு ஏற்ற உணவையோ அவள் ஒருநாளும் செய்துகொள்ள விரும்புவது இல்லை. அதுபற்றி அவள் கவலைப்படுவதும் இல்லை. மீந்துபோன உணவைக்கூட, வீணாக்கிவிடக்கூடாது என நினைத்து, அதையும் உட்கொள்வாள் பெண்.

எவரேனும் அவளிடத்தில் இது குறித்துக்கேட்டால், அதைப்பற்றி யெல்லாம் யோசிக்க எனக்கு எங்கே நேரம் உள்ளது? என்பாள்.



அலுவலகத்தில் அவள் சோர்வுடன் காணப்பட்டால், அவளுடன் வேலைபார்க்கும் சக பெண்ஊழியர்கள் "என்ன சோர்வாக உள்ளாய்? உடல்நலம் சரியில்லையா? பெண்ணாகப்பிறந்ததால், நமக்கென்று ஆயிரம் வேலை வீட்டிலும் வெளியிலும் இருக்கத் தானே செய்யும்? இது ஒன்றும் பெண்களுக்குப் புதிது இல்லையே? இதைப்பற்றி யெல்லாம் சிந்தித்துக் கொண்டே வாழாமல்,உன் உடல் நலத்தை நீ பார்த்துக் கொள்ள வேண்டாமா? "சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய முடியும்?" அதுபோல உடல்நலத்தோடு திகழ்ந்தால் தானே, எந்த இடத்திலும் உழைக்க முடியும்? என்பார்கள்.

அந்தக்கேள்விக்கும் அவள் சொல்கின்ற பதில், "எனக்கு நேரமில்லை!" என்பாள். அவளது பதிலை அல்லது அவள் தரப்பு வாதத்தை யாராவது ஏற்றுக் கொள்வார்களா? என்று அவள் சிந்திப்பது இல்லை. "நேரமில்லை!" என்ற ஒற்றை வார்த்தையைப் பதிலாகச் சொல்லி விட்டால், அதற்குமேல் கேள்விகள் கேட்கமாட்டார்கள் என்கின்ற நினைப்புத்தான் பல பெண்களின் மனதிலே நிலையாகத்தங்கி விட்டது.

பொதுவாக நமக்கு நாள் ஒன்றுக்கு,பொன்னை விட மதிப்புமிக்க 24 மணி நேரத்தை இயற்கை வழங்கியுள்ளது. அந்த 24 மணி நேரத்தில் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் 8 மணி நேரம் தூக்கத்தில் போய்விடுகிறது. அதனை எவராலும் தவிர்க்க முடியாது. நல்ல தூக்கம் ஒவ்வொரு ஆண்,பெண் இருபாலர்க்கும் தேவை. தூங்கும் பொழுதுதான் மனித மூளை ஓய்வெடுக்கும் நேரமாகும். தூங்கியது போக மீதமுள்ள 16 மணி நேரத்தில் நாம் என்ன செய்கிறோம்?என்று எவருமே,அது ஆணோ அல்லது பெண்ணோ எண்ணிப்பார்ப்பதேயில்லை.



வேலைக்குப்போகும் பெண் என்றாலும்,வீட்டிலே இருந்து வீட்டை நிர்வாகிக்கும் பெண் என்றாலும்,தங்களின் தேவைக்கு நேரத்தைப் பயன் படுத்திக்கொள்ளாமல், தேவையற்ற சிலவற்றில் தங்களின் நேரத்தை செலவழித்துவிட்டு, தங்களுக்கு "நேரமில்லை" என்கிறார்கள். "நேரமில்லை" என்று சொல்வதே, குறிப்பிட்ட வேலையில் தங்களுக்கு நாட்டமில்லை அல்லது பிரியமில்லை என்ற நோக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு செயலுக்கான பதிலாகும்.

"நேரமில்லை!" என்று பொதுவாகச்சொல்லும் மனிதர்கள், அவர்கள் பெண்களோ அல்லது ஆண்களோ யாராக இருந்தாலும், உண்மையாகத்தான் இதனைச்சொல்கிறார் களா? அல்லது தட்டிக் கழிப்பதற்காக இவ்வாறு சொல்கிறார்களா? என்பதை அவர்களின் செயல்பாடுகளைவைத்து நம்மால் உறுதியாக உணர்ந்து கொள்ள முடியும்.

"நேரமில்லை!" என்று சொல்லும் பெண்கள், தங்களை அழகுபடுத்திக் கொண்டு அலுவலகம் செல்வதற்கோ அல்லது விழாக்களில் கலந்து கொள்ளவோ மணிக் கணக்கில் காலத்தை செலவழிப்பார்கள்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு,பெண்கள் தலைசீவி, பொட்டு இட்டு கண்ணுக்கு மையிட்டு, முகத்திற்கு வாசனைப் பவுடர் தடவி, தலையிலே பூவைத்து வருவார்கள். இந்த அலங்காரத்திற்கு நேரமும் ஆகாது, செலவும் அதிகம் ஆகாது.



ஆனால் இப்பொழுது தங்களை ஒப்பனைப் படுத்துவதற்கு என்றே பல்வேறு பொருட்களை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். அதற்காக பணத்தையும் நேரத்தையும் செலவழிக்க சிறிதளவும் தயக்கம் இல்லை. மணிக்கணக்கில் தொலைக்காட்சிகளில் இடைவிடாது வருகின்ற தொடர் நாடகங்களைப் பார்க்கிறார்கள். அவற்றை தொடர்ந்து பார்ப்பதால் ஒருவித மன அழுத்தத்திற்கு ஆட்படுகிறார்கள். அதன் விளைவாக மனதில் எப்போதும் எதிர்மறை எண்ணங்கள் தோன்றுகிறது.

இப்பொழுதெல்லாம் திரையரங்கம் சென்று சினிமா பார்க்க வேண்டிய சூழல் இல்லை. திரையரங்கம் போக வேண்டும் என்றால் அதற்காக நேரத்தையும், பணத்தையும் செலவு செய்ய வேண்டும்.

இன்றைய அறிவியல் வளர்ச்சி காரணமாக திரைப்படங்களை, வீட்டில் இருந்தே பலமணி நேரம் பார்க்கமுடியும். நினைத்த நேரமெல்லாம் பார்க்க முடிகிறது. விரும்பிய திரைப்படத்தை மீண்டும் மீண்டும் பார்த்து மகிழ்கிறார்கள். ஆனால் இவற்றுக்கு எல்லாம் நேரத்தை செலவழிக்கும் பெண்கள் அதுபற்றிச் சிறிதும் யோசிப்பதேயில்லை.

சில வீடுகளில் பெண்கள் விடிந்து பலமணி நேரம் கடந்தது கூடத் தெரியாமல் உறங்குகிறார்கள். நண்பர்களுடன் அலை பேசியில் பலமணிநேரம் அரட்டை அடிக்கிறார்கள். தேவையற்ற செய்திகளை விவாதித்து தங்களின் விலை மதிப்பற்ற நேரத்தை வீணாக்கி விடுகிறார்கள். இப்படிப்பட்ட வழிகளில் நேரங்களை வீணடிப்பவர் களுக்கு, தங்களின் உடல்நலத்தை காப்பாற்றிக்கொள்ள மட்டும் "நேரமில்லை!' என்று கூறுவது உண்மைக்கு மாறாக, நகைப்புக்கு இடமாகத் தானே தோன்றுகிறது.

விலைமதிப்பற்ற, நமக்குக் கிடைத்துள்ள செல்வமான இந்த நேரத்தை வீணடிப்பது என்பது பெருங்குற்றம். நேரத்தை வீணடிப்பவர்கள் ஒருவகையில் குற்றவாளிகள். அதற்கான தண்டனையை அவர்கள் அனுபவித்துத் தான் தீரவேண்டும்.

பம்பரம்போல சுற்றிச் சுழன்று வீட்டிலும் வெளியிலும் வேலை பார்க்கும் பெண்கள் ஒவ்வொருவரும் தங்கள் உடம்பை நன்கு ஆரோக்கியமாகவைத்துக் கொள்ளவேண்டும், என்று சொன்னால், எங்களுக்கு "எதற்கும் நேரமில்லை!" என்பார்கள்.

VALATHI
Since 2005

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி
# சிட்பண்ட்ஸ் (பி) லிட்.
## வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.
## ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை**

## எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
## ரூ.1,00,000/- முதல்
## ரூ.25,00,000/- வரை

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பல்லாண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064,80
3569950,7968005.

துவக்கம்
2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-145D, NVV கேஸ்டில் முதல் தளம்
6வது கிராஸ் கிழக்கு, தில்லைநகர்.
திருச்சிராப்பள்ளி 620 018
தொடர்புக்கு: 94878 85143, 90809 78057,
0431-2760064,

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி, (ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

இப்படி ஓயாமல் வேலை பார்த்த பெண்கள் எதைச் சம்பாதித்து வைத்துள்ளார்கள் தெரியுமா? மூட்டுவலி, முதுகுவலி, மனஉளைச்சல், இரத்தக்கொதிப்பு, நீரிழிவு, முடி கொட்டுதல், மாதவிடாய் பிரச்சனை, தைராயிடு பிரச்சனை இன்னும் பலப்பல நோய்களைத் தான் சீதனமாகப்பெற்று வைத்துள்ளார்கள். இதனை பெண்கள் அனைவரும் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.



இதுபோன்ற நோய்களை உங்கள் உடம்புக்குள் வர அனுமதித்து விட்ட, நீங்கள் எத்தனைநாள் ஓடி ஓடி உழைத்துக்கொண்டே இருப்பீர்கள்? பணம் தேடி உழைக்கப்போன உங்களைத்தேடி, உங்கள் உடம்புக்குள் நோய்கள் வந்து சேர்ந்து விட்டால், சோர்ந்து போய் விடுவீர்கள். மகிழ்ச்சி என்பது மறைந்து விடும். உடம்பைப் பேண மறந்து போனோமே! என்ற நினைப்பு பின்னாளில் வந்து பயனில்லை. நோய்கள் தங்கள் வேலையைக்காட்டிவிடும். எனவே உழைக்கும் பெண்களே சிந்தியுங்கள்!

பணம் என்பது நமது வாழ்க்கைக்குத்தேவை தான். இதனை யாரும் இங்கே மறுப்பதற்கு இல்லை. இது குறித்து மாற்றுக்கருத்தும் யாருக்குமில்லை.

நமது நலத்தை இழந்து ஈட்டும் பணம் நம்மை ஒருநாளும் வாழ வைக்காது. மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துச் சேர்த்த பணத்தை, உடல் நலம் தேறுவதற்காகவும், மருத்துவச்செலவிற்காகவும் கணக்கின்றிச் செலவு செய்வதுதான் உங்களுக்கு மகிழ்ச்சியைத்தருமா?

பல்வேறு வேலைகள் இருந்தாலும், உங்கள் உடல்நலத்தைப்பேண, போதுமான நேரத்தை ஒதுக்கி, அதற்கு ஏற்ப செயல்படுங்கள்.

வீட்டு வேலைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். சமைப்பது என்பது ஒரு "பெரியவேலை" என்றால், அதைவிட பெரிய வேலை சமைத்த பாத்திரங்களை கழுவி சுத்தப்படுத்தி வைப்பது. எனவே தேவையற்ற பாத்திரங்களையும், விருந்தினர் வந்தால் சமைக்கப் பயன்படுத்தும் பாத்திரங்களையும் தினமும் எடுத்துப்பயன் படுத்தாமல், அவற்றை விடுமுறைநாளில் ஒதுக்கி எடுத்து,சமையல் அறையின் மேல்தட்டில் அடுக்கி வையுங்கள். இதனால் நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் பாத்திரங்களின் எண்ணிக்கை குறையும். அதனால் அதிகமான பாத்திரங்களை கழுவுதல் குறையும். தேவைக்கு ஏற்ற பாத்திரங்களை குறைத்துப்பயன் படுத்தவும்,எடுத்த பாத்திரங்களை காயப் போடாமல், உடனடியாக சுத்தம்செய்து, தேவைக்கு ஏற்ற வகையில் பயன் படுத்தப்பழகுங்கள்.

தினமும் சமையல் செய்யும் பொழுது ஏற்படும் காய்கறி குப்பைகளை கையில் எடுத்து குப்பைத் தொட்டியில் போடுங்கள். சிலர் அவைகளை அப்படியே தரையிலே போடுவார்கள். கடைசியாக தரையைக் கூட்டிச்சுத்தம் செய்யலாம் என்று நினைப்பார்கள். ஆனால் நேரமில்லாத காரணத்தால் அப்படியே மறந்துவிட்டு அலுவலகம் நோக்கி பறந்து விடுவீர்கள்.

இது ஒவ்வொரு இல்லத்திலும் நடைபெறும் அன்றாட நிகழ்வாகும்.

தினமும் வீட்டைப் பெருக்கிச்சுத்தம் செய்வது கடினமான ஒரு வேலைதான்.தினசரி உருவாகும் குப்பைகளை அன்றே எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டு விட்டால், வாரத்திற்கு ஒரு முறை விடுமுறை நாளில் வீட்டைப்பெருக்கி சுத்தம் செய்யலாம். வீட்டின் ஜன்னல் கதவுகளிலுள்ள அழுக்கை வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று என்ற எண்ணிக்கையில் சுத்தம் செய்யலாம். வாரத்தில் ஒருநாளை ஒதுக்கி,அன்றையதினம் தவறாமல் அழுக்குத் துணிகளைத் துவையுங்கள்

இப்படி தினசரி வேலைகளைக் குறைத்துக்கொண்டு, அதனால் கிடைக்கும் நேரத்தைக்கொண்டு, காலையில் எழுந்ததும் சற்று உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி செய்யுங்கள்.இது உங்களுக்கு ஏற்படக் கூடிய மூட்டுவலி,முதுகு வலி ஆகியவற்றைப் போக்கும். மாலை நேரத்தில் வீடுவந்து சேர்ந்தபிறகு, சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு, அரைமணி நேரம் நடைப்பயிற்சி மேற் கொள்ளுங்கள். உங்கள் உடம்பிலுள்ள எல்லா உறுப்புகளும் நடைப் பயிற்சிமேற்கொள்வதால் நன்கு செயல்படும். இரத்த ஓட்டம் சீராகும். இதனால் இதயம் சம்மந்தப்பட்ட நோய்கள் வருவது தவிர்க்கப்படும்.

இது நீங்கள் விரும்பும் நல்ல புத்தகங்களை வாங்கிப் படியுங்கள். அவைகளில் உள்ள நல்ல செய்திகள் நாளும் உங்களைப் பக்குவப்படுத்தும். இதனால் மனஅழுத்தம் குறையும்.

குடும்பத்திலுள்ள அனைவரோடும் சிரித்துப் பேசி மகிழுங்கள். இன்றைக்கு பல வீடுகளில் ஆளுக்கு ஒரு அலைபேசியை வைத்துக் கொண்டு, வீட்டின் வரவேற்பு அறையில், ஒருவருக்கு ஒருவர் பேசாமல், அலைபேசி யோடு மட்டும் பேசிக் கொண்டு வாழ்கிறார்கள்.

திடீர்என்று வீட்டிற்க்குள் யார் நுழைந்தாலும் யாரும் கவனிப்பது கூட இல்லை. வீட்டிற்க்குள் வந்த விருந்தினர் தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டு பேசும் நிலையிலேதான் இன்றைக்கு பெரும்பாலான வீடுகள் உள்ளன. அந்தளவு அலைபேசியோடு வீட்டிலுள்ள அனைவரும் மூழ்கிக்கிடக்கிறார்கள்.

"வாய்விட்டுச்சிரித்தால் நோய்விட்டுப்போகும்!" என்பார்கள். ஆனால் இன்றைக்கு கையைத் தட்டுவதும், பலமாக சிரிப்பதும், பெரியதொரு உடற்பயிற்சியாகக் கருதப்படுகிறது.




எனவே நம்வீட்டிலுள்ள அனைவரோடும் பேசி, சிரித்து மகிழுங்கள். வீட்டிலுள்ள பெரியவர் களோடு அந்தக்கால நிகழ்வுகளைப்பற்றி பேசுங்கள்.அதில் எத்தனையோசெய்திகள்,நகைச்சுவைகள் நமக்குக் கிடைக்கும். முதியவர்களும் நம்மோடு யாரும் பேசவில்லையே என்ற நினைப்பும் மறந்து போகும். உங்களுக்கும் ஒரு புத்துணர்ச்சி கிடைக்கும், முதியவர் களுக்கும் இதனால் "தனித்திருக்கிறோம்!" என்ற தளர்ச்சி நீங்கும்.



எனவே எதற்கெடுத்தாலும் "நேரமில்லை" என்று சொல்லி, உழைக்கும் பெண்களே இனியும் உங்கள் உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். நேரத்தை பகுத்துக் கொண்டு, அதைப்பயன் உள்ளதாக மாற்றிக் கொள்ளுங்கள்! நாளும் மகிழ்ச்சியோடு திகழுங்கள்! அதுவே என்றைக்கும் உங்களை இளமையாக வாழ வைக்கும் நம்புங்கள்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச்சந்திக்கிறேன் நண்பர்களே! கட்டுரை பற்றிய உங்களின் கருத்தை மறக்காமல் பதிவு செய்யுங்கள்! உங்களின் கருத்து, மின்னிதழ் பதிப்பாளருக்கும், எனக்கும் ஒரு உந்து சக்தியாக விளங்கும்!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com



"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



**PL RAMANATHAN (KANDANUR)**

**INSURANCE ADVISOR**
**LIC of india, Thiruvotriyur Branch**
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

**LIFE INSURANCE CORPORATION OF INDIA**

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA





# ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகம்

அன்புள்ள செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வணக்கம்,

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு பாத்தியப்பட்ட காரைக்குடி தலைமை அலுவலகம் சென்னை, பழனி, மதுரை, தேவிப்பட்டிணம், ஸ்ரீ காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, கல்கத்தா, தாரகேஸ்வரம், நாசிக் முதலிய சத்திரங்கள் சீரோடும் சிறப்போடும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

## காசி மிட்டாய்த் திருவிழா

**29.10.2024, செவ்வாய்க்கிழமை**
குரோதி வருடம் ஐப்பசி மாதம் 12ம் தேதி
- மாலை 5.00 மணிக்கு விசாலாட்சி கோவிலில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

**30.10.2024, புதன்கிழமை**
குரோதி வருடம் ஐப்பசி மாதம் 13ம் தேதி
- காலை 7.00 மணிக்கு சத்திரத்தில் இருந்து சிக்ரா அண்ணாமலையாருக்கு பால்குடம் எடுப்பதும் மற்றும் அபிஷேகமும் நடைபெறும்.
காலை 11.00 மணிக்கு சிக்ரா நந்தவனத்தில் உள்ள அண்ணாமலையார் கோவிலில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

**31.10.2024, வியாழக்கிழமை**
குரோதி வருடம் ஐப்பசி மாதம் 14ம் தேதி
- தீபாவளி காலை 7.00 மணிக்கு நகரேஸ்வரர் நகரேஸ்வரிக்கு அபிஷேகம் நடைபெறும்.
காலை 10.00 மணிக்கு சத்திரத்தில் மங்கல பொருட்கள் ஏலம் நடைபெறும்.
அன்று மாலை 6.00 மணிக்கு சத்திரத்தில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

**30.10.2024 - 01.11.2024** ஆகிய மூன்று தினங்களிலும் **மாலை 6.00 மணியில்** இருந்து **இரவு 8.30 மணி** வரை நமது சத்திரத்தில் அமைந்துள்ள நகரேஸ்வரர் கோவிலில் தங்க விசாலாட்சி - ஸ்ரீ சொர்ணலிங்கம் எழுந்தருள செய்யப்படும்.

## நாசிக் கார்த்திக் பூர்ணிமா


நாசிக்கில் அமைந்துள்ள கார்த்திக் ஸ்வாமி கோவிலில் **15.11.2024** மற்றும் **16.11.2024** ஆகிய இரண்டு நாட்கள் கார்த்திக் பூர்ணிமா திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

நகரத்தார் பெருமக்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ விஸ்வேஸ்வரர் மற்றும் கார்த்திக் ஸ்வாமி அருள்பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு
**2023 - 2026**
**காசி சத்திர நிர்வாகக் குழு**

# ஏடு படிப்போம் வாங்க ..!!

– ஆ.தெக்கூர் கண.இராம.நா.இராமநாதன்



பொதுவாக நமது செட்டிநாட்டில் ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் ஒவ்வொரு விழாக்கள் நிகழும். அதில் வரும்  புரட்டாசி மாதம் சற்று விசேஷம் நிறைந்த மாதம். இந்த மாதம் பிறப்பதற்கு முன்பே ஓரிரு நாட்களின் முன்பே வீட்டில்  உள்ள அனைத்து பொருட்களையும் சுத்தம் செய்வதோடு, அடுப்படி சாமான்களையும் கழுவி சுத்தம் செய்வர், மேலும் இந்த மாதத்திற்கு பயன் படுத்துவதுக்கேன்றே என்று தனியாக பாத்திரங்கள் வைத்திருப்பர் .அவற்றையே இந்த புரட்டாசி மாதத்தில் பயன்படுத்துவர். இந்த மாதத்தில் செட்டிநாட்டுப் பகுதி மக்கள் பெரும்பாலும் அனைவரும் சைவ உணவே எடுத்துக் கொள்வர் புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் காலையில் நீராடி விரதம் இருந்து பெருமாளை வணங்கி அன்றே செய்த உணவை வாழை இலையில் உண்பார்கள்.

இந்த மாதத்தில் நம் செட்டிநாட்டுப் பகுதியெங்கும் ஏடு படித்தல் ( இராமாயணம் படித்தல் ) ஊரின் பொதுவில் உள்ள கச்சேரிகூடம், பிள்ளையார் கோயில், சிவாலயம், வீடுகள், அரசமரத்தடிகள் போன்ற இடங்களில் ஓதப்படும். சில இடங்களில் காலையிலும் மிகுதியாக மாலையிலும் இராமாயணம் படிப்பது நிகழும். இந்த நிகழ்வு அனைத்து சமூகத்தவர்களாலும் நிகழ்த்தப்படும்.

இந்த விழா ஊரின் பொதுவில் அனைவரும் ஒன்றாக இணைந்து இராமர் பட்டாபிஷேகம் படம் வைத்து மாலையில் இராமாயணம் படிப்பர். அப்போது தங்களால் இயன்றதை நாட்டார்களும் நகரத்தார்களும் தினம் ஒருவராக கதை கேட்க வருபவர்களுக்கும் ராமருக்கு நிவேதனமாக சுண்டல், வடை, பாயசம், போன்ற நிவேதம் செய்து தருவர்.



அதே போல அவரவர் வீட்டிலும் புரட்டாசி மாதங்களில் இராமாயணம் பாராயணம் செய்வதுண்டு. இதற்கு இராமாயணம் படித்தல் அல்லது ஏடு படித்தல் என்று சொல்வார்கள். கிட்டத்தட்ட 8, 10 தலைமுறைகளாக இராமாயணத்தைப் படிப்பவர்களும் உண்டு. ஒரு வாரம், 9 நாட்கள், 11 நாட்கள் என புரட்டாசி மாதம் ஒரு நன்னாளில் இராமாயணத்தைப் படிக்கத் துவங்குகிறார்கள் தினமும் 2 மணி நேரம் வீதம் பாராயணம் செய்யப்பட்டு முடிவில் இராமர் பட்டாபிஷேகத்தோடு முடிக்கப்படுகின்றது.

மாலையில் வீட்டில் விளக்கேற்றி ராமர்(பட்டாபிஷேகம் ) படத்திற்கு மாலைகளும் பூக்களும் சாற்றி பூரணகும்பம் வைத்து வழிபடுவர். நாள் ஒன்றுக்கு ஒரு விதமாக இராமர் பிறப்பு முதல் பட்டாபிஷகம் வரையான நிகழ்வுகளை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியாக படிப்பர். இதை மாலையில் வேளையில் கேட்க அருகில் உள்ள நகரத்தார்கள் மற்றும் சுற்றத்தார்கள் வருவார்கள். இந்த நிகழ்வில் மூன்று நாட்கள் சிறப்பாக நிகழும்.

அவை இராமர் ஜனனம், சீதா கல்யாணம் மற்றும் இறுதி நாள் பட்டாபிஷேகம்.

எடு படிப்பதில் சீதா கல்யாணம் சிறப்பு வாய்ந்தது. இந்த நிகழ்விற்கு நகரத்தார்கள் தங்களுக்கு தெரிந்தவர்கள், சுற்றத்தார்கள், பங்காளிகள், தாயபிள்ளைகள் என்று அனைவரையும் வீட்டிற்கு திருமணத்திற்கு அழைப்பது போல் அனைவரையும் அழைப்பர்.

வீடுகள் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு மாலையில் ஏடு படித்து இராமர் சீதை திருமணம் சிறப்பாக நிகழும். அன்று மாலையில் வீட்டில் திருமண விருந்தும் நிகழும். இதேபோல் இறுதி நாள் பட்டாபிஷேகம் நிகழ்வும் சிறப்பாக கொண்டாடப்படும்.

இராமாயணம் படிப்பதில் ஒரு சூட்சமம் வைத்திருந்தனர் நம் முன்னோர்கள். இராம காவியம் நமக்கு சகோதர ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது. நம் செட்டிநாட்டில் முன்பு வீட்டில் ஐந்து அல்லது ஆறு பிள்ளைகள் இருக்கும். அவர்கள் ராமன், லெட்சுமணன், பரதன், சத்ருகன் ஆகிய நால்வர் போன்று ஒற்றுமையாய் வாழவேண்டும் அறவழியில் நடக்கவேண்டும் என்பதையும் குடும்ப ஒற்றுமை பலப்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டு இந்த நிகழ்வை தொடங்கிவைத்தனர் .





மேலும் ஊர் பொதுவாக இராமாயணம் படிப்பது நிகழ்வதன் நோக்கம், அனைத்து மக்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். தவறான வழியில் சென்றால் ஏற்படும் விளைவுகளை இராமாயண கதையின் மூலம் உணர்ந்து நல்வழியில் செல்லவேண்டும் என்ற நோக்கில் நிகழ்த்தப்படுகிறது.

மேலும் தற்போது நகரத்தார்களும், நாட்டார்களும் சரி தொழில் வேலை நிமித்தமாக நாம் நம் கிராமங்களை விட்டு வெளியேறி பல பகுதிகளில் வசிக்கிறோம். நம் இந்த மாத்ததில் நாம் உள்ள வீட்டில் ஸ்ரீ இராமர் படம் வைத்து இராமாயணம் படிக்கலாம். நம் ஐயாக்களும், ஆயாக்களும், அப்பத்தாக்களும் நமக்கும் சொல்லி சென்றதை நாமும் நம் பிள்ளைகளுக்கு சொல்லி புரிய வைக்க வேண்டும். இது நம் பண்பாடு. நம் பண்பாடை நாம் தான் பாதுகாக்க வேண்டும்.

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
இன்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையில் ராம என்றிரண்டெழுத்தினால்.





இக்கட்டுரை ஆசிரியர் இராம.நா. இராமநாதன் ஆ.தெக்கூர் – மாத்தூர் மணலூர் பிரிவை சார்ந்த நகரத்தார். சென்னையில் பணியாற்றி வரும் பொறியியல் பட்டதாரியான இவர் மொழி வரலாறு தொல்லியல் மற்றும் சிற்பக்கலையில் ஆர்வமிக்கவர். மேலும் தொல்லியல்.சிற்பக்கலையில் பகுதி நேர பட்டய படிப்பு படித்தவர் . இலக்கியம் தொல்லியல், சுதை சிற்பங்கள் சார்ந்த அறிவுசார் தகவல்களை ஆவண படுத்தி வரும் ஆர்வலர் மற்றும் வலைப்பதிவர்.

# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய
செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்

உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும்
Return gift Purpose க்கும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941



# ஆசிரியர்

அறவழி நடந்து அன்பை விதைத்து
நற்பண்பை அறுவடைசெய்யும் ஆசிரியர்

அறிவியல் விளக்கி அறிவு போதித்து
அரவணைக்கும் ஆன்றோன்

உடம்பை வருத்தி உரக்கப் பேசி
உண்மை விளம்பும் உழைப்பாளர்

பிரம்பு பிடித்து பாடம் சொல்லி
பிரமிப்பு ஊட்டும் பண்பாளர்

கரும்பலகை போன்ற  மாணவர் மனத்திடை
ஒளிவெண்மை பரப்பும் உத்தமர்

கருணை கலந்த கண்டிப்பு
பாராபட்சமில்லா பண்பு மிகுந்த பகுத்தறிவாளர்

கருவறை தந்த அன்னைக்கு ஈடாய்
வகுப்பறை வழிநடத்தும் வாத்தியார்..!!



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை



# வாழ்த்தி மகிழ்கிறோம்.

காரைக்குடி எஸ்.எம்.எஸ்.வி மேல்நிலைப் பள்ளி முதுகலைத் தமிழாசிரியரான இரணிக் கோவிலைச் சேர்ந்த **திரு. சேவு.முத்துக்குமார் அவர்கள் இந்த ஆண்டிற்கான தமிழக அரசின் நல்லாசிரியர் விருதினை ( டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது 2024 )** பெற்றுள்ளார்.

சுயமுன்னேற்ற, சமூகவியல் என  நூல்கள் பல எழுதிய இவர் நாடக ஆசிரியர், சதுரங்க விளையாட்டு ஒருங்கிணைப்பு, சமூகப் பணிகள் என பல்வேறு தளங்களில் தொடர்ந்துமக்கள்ப் பணியாற்றி வருகிறார். சாதரண மாணவர்களை சாதனை மாணவர்களாக்கும் அன்னராது பணிகள் மேலும் சிறக்க நாம் நகரத்தார் மின்னிதழ் சார்பாக அனைவரும் வாழ்த்தி மகிழ்வோமாக...!!



# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 10



– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!

## அரட்டை



"உங்களுக்கு வேலையே இல்லையாடா! நாள் பூரா ஒரே அரட்டைதானா?" என்று படிக்காத பிள்ளைகளை அம்மாக்கள் கடிந்து கொள்வார்கள். அரட்டை என்ற சொல்லுக்கு வீண் பேச்சு என்று பொருள். அப்பனில்லாதது அரட்டை, தாயில்லாதது தறுதலை என்ற பழமொழி அதனை மெய்ப்பிக்கும். தந்தையில்லாத பிள்ளை கண்டிக்க ஆளில்லாமல் வீண் பேச்சில் ஈடுபட்டு கெட்டுப்போகும் என்பது அப்பழமொழி.

## அரம்

நகரத்தார் வீடுகளில் பழைய பொருள்களில் இக்கருவி அவசியம் இருக்கும். பெண்ணுக்கு வைக்கும் சீர்களில் இரும்புச் சாமான்களில் இக் கருவியை ஒரு காலத்தில் கொடுத்துள்ளனர். இரும்பு, செம்பு போன்ற உலோகங்களை அராவி (ராவி) தேய்ப்பதற்கு

இக்கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய இளைஞர்களுக்கு இது என்னவென்றே தெரியாது. இன்று நேம்மவர்களின் பேச்சுவழக்கில் இல்லை.



### அரவம்

"ஆள்அரவமே இல்லாத தெரு அப்பச்சி, பாத்து பதவிசா போயிட்டு வா" என்று அப்பத்தாக்கள் கூறுவதைக் கேட்டிருப்போம். அரவம் என்று சொல்லுக்கு ஒலி, ஓசை என்பன பொருள். " வண்டரவு கொன்றை" என்று திருஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிப்பிடுகிறார். கொன்றை மலர் மீது வண்டுகள் பறந்து ஓசை செய்கின்றன என்பதே அதன் பொருள். ஓசையில்லாத அமைதியை இச்சொல் கொண்டு குறிப்பிடுவர்.

### அரதப் பழசு

பயன்பாட்டிலிருக்கும் பழமையான பொருட்களை அரதப் பழசு என அழைப்பது வழக்கம். " அரதப் பழசாகிப் போச்சு இந்தச் சட்டை. இத இன்னுமா போடுற?" என்பதில் இருந்து அரதப் பழசின் பொருள் விளங்கும்.

### அரிவாள் மணை (அருவாமணை)

அரிவாண் மணை என்னும் சொல்லே நம்மவர்களால் அருவாமணை என அழைக்கப்படுகிறது. அரிவாள் என்பதற்கு காய்கறிகளைச் சிறுசிறு துண்டுகளாக அறுக்கும் கத்தி என்பது பொருள். மணை என்பதற்கு பலகை என்பது பொருள். காய்கறிகளை வெட்டுவதற்கு கத்தியுடன் கூடிய பலகை என்பது அதன் பொருள்.



## அருணாசலம்

நகரத்தார் ஆண்மக்களுள் பலருக்கு இப்பெயர் உண்டு. நம் பகுதிகளில் பல தெருக்கள், அருணாசலம் தெரு என அழைக்கப்படுவதைப் பார்த்திருக்கலாம். அருணம்+ அசலம் = அருணாசலம் என்ற பெயர் உருவாகியிருக்கிறது. அருணாசலம் என்பது சிவனைக் குறிக்கும் பெயர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அருணம் என்னும் சொல்லுக்குச் சிவப்பு என்பது பொருள். அ+சலம்(அசையும்) = அசலம் என்னும் சொல்லுக்கு அசையாத என்பது பொருள். இச் சொல் ஆரியர் வருகைக்குப் பின் உருவானது.



சிவப்புக்கும் இப்பெயருக்கும் என்ன தொடர்பு? இருக்கிறது. திருமாலும், நான்முகனும் சிவபெருமானது அடிமுடியைக் காண நான்முகன் அன்னமாக மேல் நோக்கி, சிவனது முடியைக் காணச் சென்றார். பெருமாளோ, வராக(பன்றி) அவதாரம் எடுத்து சிவபெருமானது அடியைக் காணச் சென்றார். அந்நிகழ்வு நடைபெற்றது இன்றைய திருவண்ணாமலையில், அங்கு சிவபெருமான் ஒளிப் பிழம்பாக சிவந்த நிறத்தில் காட்சியளித்தார். அதைக் குறிப்பதே இச்சிவப்பு.

இதனைக் கருத்தில் கொண்டே, சிவந்த மலை, செம்மலை, அருணமலை என்று உருவாகியிருக்கலாம் என்பர். அருணமலை – அண்ணாமலை – திருவண்ணாமலை என்ற பெயர் உருவாகியிருக்கக் கூடும்.

திருவண்ணாமலைக்கும் அருணாசலத்திற்கும் என்ன தொடர்பு? அதுவும் இருக்கிறது. அசலம் என்னும் சொல்லுக்கு அசையாத என்பது பொருள் எனப் பார்த்தோம். அந்த வகையில், அசையாதது மலை என்ற பொருளைக் குறிக்கிறது. சிவந்த அசையாத மலை எனப் பொருள் கொள்ளலாம். வேறொன்றும் இல்லை. சிவன் தீப்பிழம்பாகக் காட்சி அளித்த மலை திருவண்ணாமலை. அருணமலை என்று அழைக்கப்பட்ட திருவண்ணாமலையே அருணாசலம் என நம்மவர்கள் அழைத்துள்ளனர்.

### அரைஞாண் (பட்டுக்கயிறு)

பொதுவாக ஆண்கள் அறையில் கட்டும் கயிறு. இதனை நம்மவர்கள் பட்டுக்கயிறு என அழைப்பர். "என்ன தம்பி! இவ்வளவு வளர்ந்த பிள்ளைக்கு பட்டுக்கயிறு இல்லாம விட்டுருக்க" முதல்ல பட்டுக்கயிறக் கட்டிவிடு" என்று அப்பத்தாக்கள் மகனைக் கண்டிப்பதைப் பார்த்திருப்போம். அதன் தூய தமிழ்ச் சொல் அரைஞாண் கயிறு என்பது. அரை – இடுப்பு. நாண்–ஞாண் – கயிறு, கொடி என்பன பொருள்கள். ஞாண் என்னும் சொல் வழக்கொழிந்த போது, கயிறு என்னும் சொல் கூறப்பட்டது. இதுவே அரைக்கயிறு, அரணாக்கயிறு எனக் கொச்சையாக வழங்கப்பட்டது.



இது கயிறு, கொடி என இரண்டு பெயர்களைக் கொண்டுள்ளது. கயிறு என்பது நூலாலும், நாராலும் திரிக்கப்பட்டது. கொடி என்பது பொன், வெள்ளி, முதலியவைகளால் செய்யப்பட்டது.

### அல்லாடுதல்

"ஏன்டா! இப்படி அல்லாடுற, இருந்து ஓரிடத்துல வேலை பார்த்தா என்ன? என்று நிலையாகப் பணி செய்யாமல் திரியும் மகன்களை அம்மாக்கள் கண்டிப்பர். அல் + ஆடுதல் = அல்லாடுதல். அல் என்றால் அலை என்பது பொருள். ஆடுதல் என்றால் திரிதல் என்பது பொருள். அலைந்து திரிவதைத்தான் அல்லாடுதல் என்கின்றனர்.

### அலக்கழித்தல்

"நீ என்னைய ரொம்ப அலக்கழிக்கிற. இது நல்லதில்ல. பாத்துக்க!" என்று நம்மை வெறுப்பேற்றுபவர்களைப் பார்த்து நாம் காதில் புகை வரக் கூறும் வார்த்தைகள் இவை.

அலத்தல் + அழிதல் = அலக்கழிதல். அலத்தல் என்றால் துன்புறுதல். அழிதல் என்றால் மனம் நோதல் என்பது பொருள். துன்புறுத்தி மனத்தை நோகச் செய்வதைக் குறிக்கவே அலக்கழித்தல் என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

இதே அலக்கழித்தலைச் சிறு பிள்ளைகள் விளையாட்டாகச் செய்வதும் உண்டு. இதற்கு அழகு காட்டல் என்பது பொருள். "அம்மா! தம்பி என்ன பாத்து அலக்கழிக்கிறான்" என்று பிள்ளைகள் புகார் செய்வதைப் பார்த்திருப்போம். வாயை வேறுவிதமாக வைத்து கிண்டல் செய்வது. இன்றைய பிள்ளைகளுக்கு இது என்னவென்றே தெரியாது.

– தொடர்ந்து பேசுவோம்

# ஆனந்தமாய் வாழ்ந்திடவே அருள்வான்!

– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.



கண்ணனூரில் கோவில்கொண்ட முருகா! – எம்மை
காலமெல்லாம் காத்திடுவாய் கந்தா!

எண்ணியதைத் தந்திடுவான் ஒருவன்!– அவன்தான்
கண்ணனூரில் அருளுகின்ற முருகன்!
முன்னோர்கள் கட்டிவைத்த
கோவில்!–அங்கிருந்து
என்னாளும் அருளுகின்ற பாலன்!
(கண்ணனூரில்)



கன்னியர்கள் வந்துநாளும் வணங்க! – முருகன்
கன்னியருக்கு மணம்முடித்து வைப்பான்!
உண்மையோடு அவனை நாளும் வணங்க! – நம்மை
உயர்த்திவைப்பான் என்னாளும் உயர!
(கண்ணனூரில்)



ஆனைதனை வாகனமாய்ப் பெற்றான்!– முருகன்
ஆனந்தமாய் வாழ்ந்திடவே அருள்வான்!
பானைவயிற்று கணபதியின் தம்பி! – அந்த
பாலன்தாள் பணிவோமே நம்பி!
(கண்ணனூரில்)

எளியவருக்கும் தோழனான முருகன்! – நம்மை
ஏற்றம்பெற வைத்திடுவான் வேலன்!
வழிதேடி வருவோர்க்கு முருகன்! –நாளும்
வாட்டமின்றி வாழ்ந்திடவே அருள்வான்!
(கண்ணனூரில்)



முருகனுக்குத் தோன்றிய முதற்கோவில்! – நம்மை
முந்திநிற்கச் செய்திடும் நற்கோவில்!
அருள்புரிந்து காத்திடுவான் முருகன்! – நம்மை
அரவணைத்து சொந்தமாக்கி கொள்வான்!
(கண்ணனூரில்)

முருகனின் முதல் கற்றளிக் கோயிலான கண்ணனூர் அருள்மிகு
பாலசுப்ரமண்யர் மீதான பாடல் தொகுப்பிலிருந்து

# 22ம் ஆண்டு திருமதி பழ.உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழா. மலேசியா






கல்வியில் சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு திருமதி பழ.உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழா மலேசிய தன வைசிய சங்கத்தின் ஏற்பாட்டில் டத்தோ P. காசி அவர்களின் ஆதரவில் கடந்த 22 ஆண்டுகளாக கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது.


மலேசியா மற்றும் சிங்கப்பூர் மாணவ மாணவிகள் இதுவரை 300 மேற்ப்பட்டவர்கள் இந்த விருதை பெற்று இருக்கிறார்கள். டத்தோ P.காசி அவர்களின் தாயார் நினைவாக இந்த விருது ஆண்டு தோறும் அவர்களுடைய ஆதரவில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் விளையாட்டு , தமிழ் மொழிகளில் சிறப்பு தேர்ச்சி பெற்றவர்கள், பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெற்று சிறப்பு தேர்ச்சி பெற்றவர்கள் என்று மேலும் 300 பேர் இந்த விருதினை கடந்த 22 ஆண்டுகள் பெற்று இருக்கிறார்கள்.




இந்த ஆண்டு இந்த நிகழ்வில் அண்மையில் மாலக்கா மாநில ஆளுனரின் பிறந்த நாளை முன்னிட்டு "டத்தோ" என்ற உயரிய விருதினைப் பெற்ற மலேசிய தன வைசிய சங்கத்தின் மலாக்கா மாநிலத்தின் வட்டாரச் செயலாளர் டாக்டர் TR. கல்யாண சுந்தரம் அவர்களுக்கு பாராட்டு விழாவும் நடைபெற்றது. அதிகமானோர் கலந்து கொண்டு விருது பெற்றவர்களை வாழ்த்தினார்.

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA



## அழகுப் பூக்கள்...

காலையில் மலரும் தாமரைப்பூ
... காண்போம் குளத்தில் புதுவனப்பு
மாலையில் மலரும் மல்லிகைப்பூ
... மணக்கும் கொடியில் வெகுசிறப்பு
சோலையில் அழகாய் செண்பகப்பூ
... சூரியன் போல்நிறம் மஞ்சள்பூ
வேலியில் கூட இளஞ்சிவப்பு
... விளைந்தே குலுங்கும் காகிதப்பூ!

## அன்பே ஆனந்தம்



அம்மா அம்மா முத்தம் தா
... அப்பா நீயொரு முத்தம் தா
அண்ணன் அக்கா கைப்பிடிக்க
... அழகிய உறவுகள் ஆனந்தமே
அகிலம் நிறைந்த பாசமிது
... அதிலே மகிழ்ச்சி இருக்கிறது
அதிசய உலகில் பயணிக்க
... அன்பே போதும் ஆனந்தமே!





# துரோணரும் ஆடுகளும்...

– புலவர் த.கோவேந்தன், டி. லிட்

துரியோதனன் முதலிய நூற்றுவர்க்கும் தருமன் முதலியயோருக்கும் வில்லாசிரியர் துரோணர். அவருக்கு ஒரே மகன் அவன் பெயர் அசுவத்தாமன். அவன் தாய் வயிற்றில் பிறக்காமல், இறையருளால் தானே தோன்றியவன் ஆதலால் அவனுக்குத் தாய்ப்பால் கிடைக்கவில்லை.

பசுப்பால் வாங்குவதற்கும் வசதி இல்லை. தம் நண்பனான பாஞ்சால மன்னன் துருபத மன்னனிடம் சென்று, ஒரு பாற்பசு தரும்படி கேட்டார் துரோணர்.

பாஞ்சாலன் பாற்பசு தராமல் துரோணரை அவமதித்து அனுப்பினான் துரோணர் பால் கிடைக்காமல் அவதிப்படுகின்றார் என்று கேள்விப்பட்ட ஓர் வள்ளல் இரு பாலாடுகளை வழங்கினார்.

அந்த ஆடுகளைக் கண்ட கள்வன் ஒருவன் அவற்றைத திருடிச் செல்லத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தான். ஓர் அரக்கன் துரோணரைத் தனக்கு ஆகாரம் ஆக்கிக் கொள்ளக் காலம் கருதியிருந்தான்

ஒருநாள், கள்வன் ஆடுகளைத் திருடத் துரோணரின் ஆசிரமத்தின் அருகே பதுங்கியிருந்தான்

அந்நேரம் அரக்கனும் துரோணரைப் பிடித்து உண்பதற்காக அங்கே வந்தான்.அரக்கனும் திருடனும சந்தித்துக் கொண்டனர் ஆடு திருட வந்ததாகத் திருடன் சொன்னான். முனிவரைப் புசிக்க வந்ததாக அரக்கன் கூறினான் இருவரில் யார் முதலில் தம் தொழிலை முடிப்பது என்பதில் விவாதம் ஏற்பட்டது. அரக்கன், "நான் தான் முதலில் முனிவரைத் தின்பேன்" என்றான், திருடன், "நான் தான் முதலில் ஆடுகளைத் திருடுவேன்" என்றான் விவாதம் வலுத்தது.

துரோணர் நிலைமையை உணர்ந்து கொண்டார். தன் தவ வலிமையால் அரக்கனைச் சாம்பலாக்கி விட்டார் திருடனைக் கல்லாகச் சபித்தார்.

குரு நிலத்தை அடுத்த காட்டில் இன்றும் அந்தக்கல் இருப்பதாகப் பேசிக் கொள்கின்றனர்.




நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக... இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின் உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 10



# விருப்பம் இல்லா வாழ்வு

– சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

எல்லை மீறினால் மன்னித்து விடுங்கள், அல்லது கடந்து விடுங்கள் ஆனால் தூக்கிச்சுமக்காதீர்கள். உங்கள்வாழ்க்கையே சுமையாகி விடும்.

இஷ்ட மிலாத ஒருவனுடன் கூடி
இல்லறம் என்றொரு பேர்சொல்லியே..
கட்டி யழுவதில் செத்துத் தொலைவதைக்
கைக்கொளல் மேலெனக் கும்மியடி
–ராய.சொ. கும்மி பாடல்.

விருப்பமில்லாத ஒருவனுடன் கூடி வாழும் வாழ்க்கைக்கு, செத்துத் தொலைவதே மேல் என்கிறார் தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கனார். ஆண்டாண்டு காலம் அடிமை வாழ்வைத் தொடரும் பெண்ணுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது அவரது கும்மிப்பாடல், நூறாண்டுகளுக்கு முன்பு விளைந்த சிந்தனை இது..



எந்தவிதத்திலும் ஏற்காத மனம், உடல் கொண்டு கூடி வாழ்வதில் நன்மை இல்லை, அதற்கு தனித்திருந்து நிம்மதியாக வாழ்வதே சாலச்சிறந்தது.. சமுதாயத்திற்குப் பயந்து கணவன் என்ற பெயரில் கயவனோடு, துரோகியோடு வாழும் வாழ்க்கை வாழ்க்கையாகாது. விதியை நோகாமல் அவனிடமிருந்தே விலக்கு பெற்று, மற்றொரு வாழ்க்கையைத் தொடர்தலே நலம்.

அகத்தில் அன்பு இல்லாத வாழ்க்கை வாழ்க்கையாகாது.. ஒன்று மில்லாத ஜடத்தைக் கட்டிக்கொண்டு எத்தனை நாட்கள் தான் நடைப்பிணமாக வாழ்வது. இங்கு உண்மை என நினைக்கும் எதுவுமே உண்மையில்லை.



உலகின் மிகப் பெரிய காதல் சின்னம் எது என்று கேட்டால் உடனே நாம் தாஜ்மகால் எனச் சொல்வோம், அவ்வாறு சொல்லப்பட்டு நாம் வளர்க்கப்பட்டிருக்கிறோம்.. ஆய்ந்து நோக்கினால் தாஜ்மகால் காதல் சின்னமும் அல்ல, ஷாஜகான் நல்ல காதலனும் அல்ல.

'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்றதே இன்பம்' என்று இன்ப வாழ்க்கைக்கு இலக்கணம் சொன்ன பாடல்வரிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஷாஜகானுடன் மும்தாஜ் வாழ்ந்தது. கட்டாயம்படுத்தப்பட்ட, சுயநலமிக்க, துன்ப வாழ்க்கை, மாடமாளிகையில் மாட்டிக் கொண்ட சிறைப்பறவை அவள்.. ஷாஜகானுக்கு இருந்தது மும்தாஜின் மீது காமம், மும்தாஜிக்கு இருந்தது பயம், இதில் காதலும் இல்லை, கத்தரிக்காயும் இல்லை..



இவ்வாறாகத்தான் ஒருவர் மீது ஒருவர் விருப்பமின்றி, பலர் இயந்திரமாக இயங்கி வருகிறார்கள். போலித்தனமான வாழ்க்கையை விடுத்து தனித்து வாழ்வதோ (அ) இருமனம் இணைந்து மறுமணம் செய்து கொள்வதோ தவறில்லை என்பதை உணர்ந்து அதன்படி நடந்தாலே போதும் வாழ்க்கை சோலையாகும். வாழ்க்கை வாழ்வதற்கே 'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' என்பதற்கு மனித வாழ்க்கை ஜடப்பொருள் அன்று, உணர்ச்சிகளின், உணர்வுகளின் குவியல். அஃது போற்றப்பட வேண்டும்.



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram




# சைவ மட்டன் பிரியாணி செய்வது எப்படி ....

ஒரு சில சமயம் வீட்டிலுள்ளவர்கள் புரட்டாசி மாதத்திலோ அல்லது பௌர்ணமி, அமாவாசை தினங்களில் ஏதேனும் அசைவம் சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது என்பார்கள். அவ்வாறு அந்த நேரத்தில் அதே சுவையில் சைவ உணவுகளையும் எளிமையாக சமைத்து கொடுக்க முடியும்.

சுவையான பிரியாணியில் பல வகையுண்டு, சைவ மட்டன் பிரியாணி சோயா துண்டுகளால் தயாரிக்க படுகிறது. சோயா உயர் புரத மற்றும் பல வகை உணவுகள் சைவ மற்றும்அசைவ மாற்றாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த மீல் மேக்கர் பிரியாணி செய்து கொடுத்தால் உங்கள் வீட்டில் உள்ள சிறியவர்கள் முதல் உங்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் வகையில் அற்புதமாக இருக்கும் அடுத்த முறையும் உங்களை இது போல் செய்து தர சொல்லி கேட்பார்கள்.

உங்களுக்கு மீல் மேக்கர் பிரியாணி எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே மீல் மேக்கர் பிரியாணி ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.


## செய்யத்தேவையான பொருட்கள்:

- சோயா– 1/2 கோப்பை,ஊறவைத்து சிறு துண்டுகளாக
- வெட்டிக்கொள்ளவும்.
- பெரிய வெங்காயம் – 1
- தக்காளி –2
- பச்சை மிளகாய்–2
- இஞ்சி பூண்டு விழுது– 2 தேக்கரண்டி
- கறி வேப்பிலை–1 கொத்து
- மிளகாய்த்தூள்–1/2 தேக்கரண்டி
- கரம் மசாலா தூள்–1/2 தேக்கரண்டி
- உப்பு–1 தேக்கரண்டி
- மஞ்சள் தூள்–1/4 தேக்கரண்டி
- எண்ணெய்– 3 மேஜைக்கரண்டி
- நெய்–1 மேஜைக்கரண்டி
- பாசுமதி அரிசி–2 கோப்பை
- தேங்காய்ப்பால் அல்லது தயிர்–1/2 கோப்பை



## தாளிக்க

- முந்திரி–5 ,7
- பட்டை–1 அங்குலம் –2
- கிராம்பு–2
- பிரியாணியிலை–3 அங்குலம்
- ஏலக்காய்–2
- கல்பாசிப்பூ–1
- ஜாதிப்பத்திரி–1 அங்குலம்
- மிளகு–1/4 தேக்கரண்டி



### அரைக்க

- புதினா, மல்லி இலை 1/2 கோப்பை
- சோம்பு–1 தேக்கரண்டி
- சீரகம் –1 தேக்கரண்டி
- பச்சை மிளகாய்–3

### செய்முறை:

- அரிசியை நன்கு கழுவி 15 நிமிடம் ஊற வைக்கவும்
- கடாயில் எண்ணெய் காய்ந்ததும் தாளிதம் செய்யவும்.
- இஞ்சி பூண்டு விழுது, நறுக்கிய வெங்காயம் சேர்த்து பொன்னிறமாக வதக்கவும்.
- பின்னர், தக்காளி, பச்சை மிளகாய், மற்றும் ஊறவைத்து நறுக்கிய சோயா சேர்த்து வதக்கவும்.
- நன்கு வதங்கிய பின்னர், அரைத்த விழுது சேர்த்து வதக்கவும்.
- தயிர், உப்பு, மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், தண்ணீர் 2 கோப்பை மற்றும் ஊறவைத்த அரிசி, சேர்த்து கலந்து, கொதித்ததும் குக்கரில் 2 விசில் வைத்து எடுக்கவும்.
- மல்லி இல்லை தூவி, முந்திரி நெய்யில் வறுத்து அதையும் தூவி பரிமாறவும்.
- தேவைப்பட்டால் எலுமிச்சை சாறு சேர்த்துக்கொள்ளலாம்.

சுவையான. சைவ மட்டன் பிரியாணி ரெடி.....

கட்டுரையாக்கம்:

உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.



# ஐ பி ஓ செய்திகள்

## Grey Market Premium / சாம்பல் சந்தை பிரீமியம்



– கார்த்திக் முத்தப்பன்
நகரத்தார் கேப்பிட்டல்

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) எழுதும் இந்தப் பகுதியில் ஐ பி ஓ வெளியீடு / குறித்த செய்திகளை அறியலாம்.




### IPO கிரே மார்க்கெட் (IPO Grey Market)

IPO கிரே மார்க்கெட் என்பது ஒரு அதிகாரப்பூர்வமற்ற மற்றும் முறைசாரா சந்தையாகும், அங்கு IPO பங்குகள் அதிகாரப்பூர்வமாக பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதற்கு முன்பு வர்த்தகம் செய்யப்படுகின்றன.

## சாம்பல் சந்தை என்றால் என்ன? (Grey Market Premium Meaning)

சட்டபூர்வமாக பங்குகள் முதன்மை மற்றும் இரண்டாவது சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படுகின்றன, இது பங்குச் சந்தைகளால் வசதி அளிக்கப்படுகிறது. புதிய பங்குகள் உருவாக்கப்பட்டு முதன்மை சந்தையில் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. ஒரு ஆரம்ப பொது சலுகை என்பது ஒரு முதன்மை சந்தையின் ஒரு உதாரணமாகும். பட்டியலிடப்பட்ட பிறகு, பங்குகள் இரண்டாம் சந்தையில் வர்த்தகம் செய்யப்படுகின்றன. முதன்மை மற்றும் இரண்டாவது சந்தைகளில் நடக்கும் வர்த்தகங்கள் பங்குச் சந்தைகளால் வசதி அளிக்கப்படுகின்றன மற்றும் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியத்தால் (SEBI) ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இருப்பினும், பட்டியலிடப்படுவதற்கு முன்னர் பங்குகள் சாம்பல் சந்தையில் வர்த்தகம் செய்யப்படுகின்றன. பங்குகளுக்கான சாம்பல் சந்தை விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை விட நம்பிக்கையில் செயல்படும் ஒரு மூடப்படாத, முறைசாரா சந்தையாக இல்லை. சாம்பல் சந்தை SEBI அல்லது வேறு எந்த சட்ட அதிகாரி மூலம் ஒழுங்குபடுத்தப்படாது மற்றும் சாம்பல் சந்தையில் செயல்படுவதில் இருந்து ஏற்படும் எந்தவொரு ஆபத்தும் முதலீட்டாளரால் ஏற்கப்பட வேண்டும். சாம்பல் சந்தையில் உள்ள வர்த்தகங்கள் பெரும்பாலும் சிறு காகிதம் மற்றும் அதிகாரமற்ற டீலர்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

ஒரு சாம்பல் சந்தை பங்கு என்பது அதிகாரப்பூர்வமற்ற முறையில் வர்த்தகம் செய்யப்படும் நிறுவனத்தின் பங்குகளைக் குறிக்கிறது.

ஒரு நிறுவனத்தின் பங்குகள் அவர்களின் அதிகாரப்பூர்வ IPO–க்கு முன் வர்த்தகர்களால் வழங்கப்படும்போது, அது சாம்பல் சந்தை பங்கு வகைக்குள் விழும்.

பொதுவாக, ஒரு குறிப்பிட்ட தனிநபர்கள் சாம்பல் சந்தை பங்குகளை இயக்குகிறார்கள், மேலும் இது தனிநபர்களுக்கு இடையிலான நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படுகிறது. இந்தியாவில் கிரே மார்க்கெட் பங்குகளில் வர்த்தகம் செய்வது சட்டபூர்வமானது மற்றும் அதிகாரப்பூர்வமற்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட சேனல்கள் மூலம் அதிகாரப்பூர்வ வர்த்தகம் தொடங்கும் வரை கிரே மார்க்கெட்டில் நடத்தப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும் தீர்க்கப்பட முடியாது.

## கிரே மார்க்கெட்டில் வர்த்தக வகைகள் (Types of Trading in Grey Market)

### கிரே மார்க்கெட்டில் வர்த்தகத்தை இரண்டு வகைகளாக வகைப்படுத்தலாம்:

1. பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்படுவதற்கு முன்பு ஒதுக்கப்பட்ட IPO பங்குகளை வாங்குதல் அல்லது விற்றல்.

2. குறிப்பிட்ட விகிதங்கள் அல்லது பிரீமியங்களில் IPO விண்ணப்பங்களை வாங்குதல் அல்லது விற்றல்.

## கிரே மார்க்கெட்டில் IPO பங்குகளை வர்த்தகம் செய்வதற்கான நடைமுறைகள்(Steps to Trade IPO Shares in the Grey Market)

## கிரே மார்க்கெட்டில் IPO பங்குகளை வர்த்தகம் செய்யும் செயல்முறை பின்வருமாறு சில நடைமுறைகளை உள்ளடக்கியது:

1. IPO பங்குகள் வர்த்தகத்தைப் போலவே, கிரே மார்க்கெட்டில் IPO பயன்பாடுகள் வாங்குபவர்கள் மற்றும் விற்பனையாளர்களை உள்ளடக்கியது.

2. வாங்குபவர்கள் சந்தை நிலைமைகள் மற்றும் அனுமானங்களின் அடிப்படையில் பயன்பாட்டின் விலையை தீர்மானிக்கிறார்கள், விற்பனையாளர்களுக்கு பிரீமியத்தை வழங்குகிறார்கள்.

3. விற்பனையாளர்கள் கூடுதல் பாதுகாப்பிற்காக கிரே மார்க்கெட் டீலர் மூலம் பயன்பாடுகளை விற்கலாம்.

